ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 7.4 – கண்சோர

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 7.4 – கண்சோர

‡ கண் சோர வெம் குருதி வந்திழிய ⋆
வெம் தழல் போல் கூந்தலாளை ⋆
மண் சேர முலை உண்ட மா மதலாய் ! ⋆
வானவர் தம் கோவே ! என்று ⋆
விண் சேரும் இளந் திங்கள் அகடுரிஞ்சு ⋆
மணி மாட மல்கு ⋆ செல்வத் தண்
சேறை எம் பெருமான் தாள் தொழுவார் காண்மின் ⋆
என் தலை மேலாரே ‖ **7.4.1** ‖

அம் புருவ வரி நெடுங்கண் ⋆
அலர் மகளை வரை அகலத்தமர்ந்து ⋆
மல்லல் கொம்புருவ விளங்கனி மேல் ⋆
இளங்கன்று கொண்டெறிந்த கூத்தர் போலாம் ⋆
வம்பலரும் தண் சோலை ⋆
வண் சேறை வான் உந்து கோயில் மேய ⋆
எம் பெருமான் தாள் தொழுவார் ⋆
எப்பொழுதும் என் மனத்தே இருக்கின்றாரே ‖ **7.4.2** ‖

மீதோடி வாள் எயிறு மின் இலக ⋆
முன் விலகும் உருவினாளை ⋆
காதோடு கொடி மூக்கன்றுடன் அறுத்த ⋆
கைத் தலத்தா ! என்று நின்று ⋆
தாதோடு வண்டலம்பும் ⋆

தண் சேறை எம் பெருமான் தாளை ஏத்தி ⋆
போதோடு புனல் தூவும் புண்ணியரே ⋆
விண்ணவரின் பொலிகின்றாரே ॥ **7.4.3** ॥

தேர் ஆளும் வாள் அரக்கன் ⋆
தென் இலங்கை வெஞ்சமத்துப் பொன்றி வீழ ⋆
போர் ஆளும் சிலை அதனால் ⋆
பொரு கணைகள் போக்குவித்தாய் ! என்று ⋆
நாளும் தார் ஆளும் வரை மார்பன் ⋆
தண் சேறை எம் பெருமான் உம்பர் ஆளும் ⋆
பேர் ஆளன் பேர் ஓதும் பெரியோரை ⋆
ஒரு காலும் பிரிகிலேனே ॥ **7.4.4** ॥

வந்திக்கும் மற்றவர்க்கும் ⋆
மாசுடம்பில் வல் அமணர் தமக்கும் அல்லேன் ⋆
முந்திச் சென்றரி உருவாய் ⋆
இரணியனை முரண் அழித்த முதல்வர்க்கல்லால் ⋆
சந்தப் பூ மலர்ச் சோலை ⋆
தண் சேறை எம் பெருமான் தாளை ⋆
நாளும் சிந்திப்பார்க்கென் உள்ளம் தேன் ஊறி ⋆
எப்பொழுதும் தித்திக்குமே ॥ **7.4.5** ॥

பண்டேனம் ஆய் உலகை அன்றிடந்த ⋆
பண்பாளா ! என்று நின்று ⋆
தொண்டானேன் திருவடியே துணை அல்லால் ⋆
துணை இலேன் சொல்லுகின்றேன் ⋆
வண்டேந்தும் மலர்ப் புறவில் ⋆
வண் சேறை எம் பெருமான் அடியார் தம்மை ⋆

கண்டேனுக்கிது காணீர் ⋆
என் நெஞ்சும் கண்ணிணையும் களிக்கும் ஆறே ‖ **7.4.6** ‖

பை விரியும் வரி அரவில் ⋆
படு கடலுள் துயில் அமர்ந்த பண்பா ! என்றும் ⋆
மை விரியும் மணி வரை போல் ⋆
மாயவனே ! என்றென்றும் வண்டார் நீலம் ⋆
செய் விரியும் தண் சேறை எம் பெருமான் ⋆
திருவடியைச் சிந்தித்தேற்கு ⋆
என் ஐ அறிவும் கொண்டானுக்கு ⋆
ஆள் ஆனார்க் காளாம் என் அன்பு தானே ‖ **7.4.7** ‖

உண்ணாது வெம் கூற்றம் ⋆
ஓவாத பாவங்கள் சேரா ⋆
மேலை விண்ணோரும் மண்ணோரும் வந்திறைஞ்சும் ⋆
மென் தளிர் போல் அடியினானை ⋆
பண்ணார வண்டியம்பும் பைம் பொழில் சூழ் ⋆
தண் சேறை அம்மான் தன்னை ⋆
கண்ணாரக் கண்டுருகி ⋆
கை ஆரத் தொழுவாரைக் கருதுங்காலே ‖ **7.4.8** ‖

கள்ளத்தேன் பொய் அகத்தேன் ஆதலால் ⋆
போதொரு கால் கவலை என்னும் ⋆
வெள்ளத்தேற்கென் கொலோ ⋆
விளை வயலுள் கரு நீலம் களைஞர் தாளால் தள்ள ⋆
தேன் மண நாறும் ⋆
தண் சேறை எம் பெருமான் தாளை ⋆

நாளும் உள்ளத்தே வைப்பாருக்கிது காணீர் ⋆
என் உள்ளம் உருகும் ஆறே ॥ **7.4.9** ॥

‡ பூ மாண் சேர் கருங்குழலார் போல் நடந்து ⋆
வயல் நின்ற பெடையோடு ⋆
அன்னம் தேமாவின் இன் இழலில் கண் துயிலும் ⋆
தண் சேறை அம்மான் தன்னை ⋆
வா மான் தேர்ப் பரகாலன் ⋆
கலிகன்றி ஒலி மாலை கொண்டு தொண்டீர் ⋆
தூ மான் சேர் பொன் அடிமேல் சூட்டுமின் ⋆
நும் துணைக் கையால் தொழுது நின்றே ॥ **7.4.10** ॥

அடிவரவு — கண் அம்பு மீதோடி தேராளும் வந்திக்கும் பண்டு பைவிரியும் உண்ணாது கள்ளத்தேன் பூமாண் தந்தை

கண்சோர முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்